Written by Administrator
Sunday, 21 June 2009 08:18 - Last Updated Sunday, 21 June 2009 08:23

□□□□□□□

21.06.2009

ஆவடி, திருவொற்றியூருக்கு மாநகராட்சி அந்தஸ்து?

உயர் நிலைக்குழு அறிக்கை ஐலைவில் தாக்கல்

சென்னை, ஜூன் 20: சென்னை புறநகரில் உள்ள ஆவடி, திருவொற்றியூர் நகராட்சிகள் மாநகராட்சிகளாக தரம் உயர்த்தப்படலாம் என தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக புறநகர்ப் பகுதியில் புதிய மாநகராட்சிகளை உருவாக்குவது குறித்து பரிந்துரைகள் வழங்க அமைக்கப்பட்ட உயர் நிலைக்குழு தனது அறிக்கையை ஜூன்மாதம் முதல் வாரத்தில் அரசிடம் அளிக்கப்பட உள்ளது.

சென்னைப் புறநகரில் மாநகராட்சி அமைவதில் வரும் வரிச்சிக்கல் காரணமாக மேல்மாட்டு பகுதிகளின் வேலை அதிகரித்துள்ளது. இல்லாது மேல்மாட்டு பகுதிகளை மெதுவாக்கி இல் உள்ளாட்சி அமைப்புகளுக்கு கிடைக்கின் உள்ள நிலை வேறு மாநி காரணமாக மன்னேறு நடைமுறை சிக்கல்கள் எழுகின்றன.

இதற்காக புறநகர்ப் பகுதி களை ஒருங்கிணைத்து 2 புதிய மாநகராட்சிகளை உருவாக்க அரசு முடிவு செய்தது. புதிய மாநகராட்சிகள் உருவாக்கம் குறித்து ஆய்வு செய்வதற்கு புதிய மாநகராட்சியுடன் சேர்ப்பது என்பது குறித்து பொதுமக்களின் கருத்துகளை கேட்டறிந்து பரிந்துரைகள் வழங்க சென்னைப் பெருநகர் வளர்ச்சி குழுமத்தின் நிபுணர் குழுவை அரசு அமைத்தது.

இந்தக் குழுவினர் தாம்பரம், அம்பத்தூர் நகராட்சிகளை கொண்டு இரு புதிய மாநகராட்சிகளை உருவாக்குவது தொடர்பாக 5 வரைபடங்களைத் தயாரித்தனர்.

இதன் அடிப்படையில் மாநகராட்சிகள் உருவாக்கம் குறித்து தாம்பரம், அம்பத்தூர், திருவொற்றியூர் ஆகிய இடங்களில் பொதுமக்களின் கருத்துகளை கேட்டறிந்தனர்.

மன்னேறு பகுதிகளைச் சேர்த்து கலர் 1 ஆயிரத்துக்கும் அதிக மாபோர் தங்களது கருத்து களை தெரிவித்துள்ளனர். குறிப்பாக திருவொற்றியூர், ஆவடி நகராட்சிகள் மற்றும் தாம்பரம் நகராட்சி ஆகியவற்றை ஒட்டி ஏதுள்ள பகுதிகளில் இருந்துதான் பெரும்பாலான மக்கள் தங்கள் பகுதிகளை அம்பத்தூர் நகராட்சியுடன் சேர்க்க கேண்டாம் என கருத்து தெரிவித்திருந்தனர்.

சி.எம்.டி.ஏ. துணைத் தலைவர் பேட்டி: இந்த நிலவரம் பேசப்படும் துணைத் தலைவர் குமரன் வேலு சென்னையில் நிருபர்களிடம் கூறியது:

புறநகரில் புதிய மாநகராட்சிகள் உருவாக்கம் குறித்து கலர் வரைவு அறிக்கை இறுதி செய்யப்பட்டுவிட்டது. இந்த அறிக்கையை சி இறைத்து தரவுகளை சில வரைபடங்களை தயாரித்தும் பணிகள் குறிப்பாது நடைபெற்றுவருகிறது.

இந்தப் பணிகள் அடுத்த சில நாள்களில் முடிக்கப்பட்டு ஜூலை முதல் வாரத்தில் அறிக்கை அரசிடம் தாக்கல் செய்யப்படும்.

தங்கள் பகுதிகளை தனி மாநகராட்சிகளாக அறிவிக்க வேண்டும் என்று ஆவடி, திருவொற்றியூர் நகராட்சிகளைச் சேர்ந்த மக்கள் தெரிவித்த கருத்துகளுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

புதிய மாநகராட்சிகளை உருவாக்குவது உண்மைதான். ஆனால் அதிகாரத்த உள்ள சென்னை பெருநகர் பகுதியில் பரப்பளவை விரிவுபடுத்த வேண்டிய தேவை எழுந்துள்ளது. இந்த போல் சென்னை மாநகராட்சியின் எல்லையையும் மாற்றி அமைக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. இது அறிக்கை தயாரிப்பின்போது கருத்தில் கொள்ளப்பட்டது என்றார் குமரன்வேலு.

சி.எம்.டி.ஏ. துணைத் தலைவரின் கருத்து அடுத்து தாம்பரம், அம்பத்தூர் நகராட்சிகளை மட்டுமல்லாது ஆவடி, திருவொற்றியூர் பகுதிகளையும் தலையாவட்டாக்கி கொண்டு புதிய மாநகராட்சிகளை உருவாக்க அரசுக்கு பரிந்துரைக்கப்படலாம் என தெரிவிக்கிறார்கள்.